Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No. CC .NO. 13/2023
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No. 07 , Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. கவியரசு | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | திரு. குப்பன் | தொழில் | தனியார் நிறுவனப்பணி |
| கிராமம் | கீழ்குப்பம் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 27 |
| எதிரி ஆஜர் | | | 1 |
| | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 04th day of November 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>அ.சா.07 திரு. கவியரசு முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனப்பணி செய்து வருகிறேன். கடந்த 06.11.2022 அன்று காலை 11.00 மணிக்கு வாணியம்பாடி ABS சர்வீஸ் சென்டருக்கு நான் என்னுடைய குளிர்சாதனப்பெட்டியை பழுது பார்க்க சென்ற போது அந்த இடத்தில் வைத்து போலீசார் ஒரு நபரை விசாரித்து கொண்டிருந்தனர். என்னை சாட்சியாக அழைத்து என் முன்னிலையில் அந்த நபரை விசாரித்த போது அந்த நபர் ஆரம் மற்றும் சையின் ஆகிய நகைகளை அச்சமங்கலம் மற்றும் திருப்பத்தூர் ஆகிய இடங்களில் எடுத்ததாக வாக்குமூலம் அளித்தார். ஆஜர் எதிரி தான் போலீசாரிடம் அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் அளித்த நபர் ஆவார். மேலும் ஆஜர் எதிரி அவர் குறிபிட்ட நகைகளை போலீசாரிடம் ஆஜர்படுத்தினார். நான் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்க்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலம் மற்றும்

கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **(அ.சா.ஆ 06 ஆகவும் கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ 07, 08 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கீழ் குப்பம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் வசிக்கும் கிராமம் ஆனது திருப்பத்தூரில் இருந்து சுமார் 7 கி.மீ தொலைவில் உள்ளது. திருப்பத்தூரில் சர்வீஸ் சென்டர்கள் இருப்பதால் நான் வாணியம்பாடிக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக வாணியம்பாடி சென்றதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் மொத்தம் இரண்டு கையொப்பங்கள் மட்டுமே செய்தேன். என்னிடம் ஆண் ஆய்வளர் ஒருவர் கையொப்பம் பெற்றார். என்னுடன் சத்தீயசீலன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தார். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் கையொப்பம் இடவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தோம் என்றாலும் நான் கூறுவது போல் என் முன்னிலையில் பொருட்கள் ஏதும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. என் முன்னிலையில் போலீசார் எவ்வித ஆவணமும் தயார் செய்ய வில்லை என்றாலும் நான் அதில் சாட்சியாக கையொப்பம் இடவில்லை என்றாலும் சரியல்ல.